<u>சார்பு நீதிமன்றம், சத்தியமங்கலம்</u>

<u>O.S. No.152/2020</u>

2026–ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 11–ஆம் நாள் வா.சா.1 சாட்சி திரு.முருகேசன் என் முன் சாட்சியாக விசாரிக்கப்படுபவர். 1969ம் ஆண்டு 24வது சட்டப்பிரிவு 4(1) ஏற்பாட்டின்படி உயர்திரு.கே.எஸ்.ஷபீனா, பி.ஏ., பி.எல்., சார்பு நீதிபதி, சத்தியமங்கலம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : திரு.முருகேசன் | தொழில் | : |
| த/பெ | : நஞ்சப்பன் | கிராமம் | : வரதம்பாளையம் |
| வயது | : | தாலுக்கா | : சத்தியமங்கலம் |

<u>வா.சா. : முதல் விசாரணை:</u>

நான் இவ்வழக்கில் வாதி ஆவேன். என் தரப்பில் சாட்சியமாக விசாரணை செய்ய பிரமாணவாக்குமூல பத்திரம் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி பிரமாணப்பத்திரிக்கையில் கண்டுள்ள சங்கதிகளை அறிவேன். எனது நிரூபண வாக்குமூலத்தை முதல் விசாரணையாக ஏற்ககோருகிறேன். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான்.

<u>ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது.</u>

15.05.2013ம் தேதியிட்ட வாதி மற்றும் பிரதிவாதி பெயரிலுளள உயில் சாசனம் சான்று நகல் வா.சா.ஆ.1 ஆகவும், 16.02.2018ம் தேதியிட்ட வாதி மற்றும் பிரதிவாதிகளின் தகப்பனார் நஞ்சப்பனின் வாரிசு சான்றிதழ் சான்று நகல் வா.சா.ஆ.2 ஆகவும், 18.11.1982ம் தேதியிட்ட தகப்பனார் நஞ்சப்பன் பெயரிலுள்ள கிரையப்பத்திரம்

சான்று நகல் வா.சா.ஆ.3 ஆகவும், 01.11.2019ம் தேதியிட்ட வாதியின் தாயார் நஞ்சம்மாளின் இறப்பு சான்றிதழ் சான்று நகல் வா.சா.ஆ.4 ஆகவும், 26.09.2020ம் தேதியிட்ட தாவா சொத்திற்கான வில்லங்கச்சான்று இணைய நகல் வா.சா.ஆ.5 ஆகவும், 26.08.2020ம் தேதியிட்ட அரசு வழிகாட்டி மதிப்பு இணைய நகல் வா.சா.ஆ.6 ஆகவும், 14.11.2025ம் தேதியிட்ட நஞ்சப்பனின் இறப்பு சான்றிதழ் சான்று நகல் வா.சா.ஆ.7 ஆகவும் ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி ஆவணங்களின் பரிசீலனையில் தாவாப்படி பரிகாரம் வழங்க கோருகிறேன்.

பிரதிவாதி வருகையில்லாத் தரப்பினராக தீர்மானிக்கப்பட்டுள்ளதால் குறுக்கு விசாரணை இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் என்னால் அழைக்கப்பட்டு சாட்சியிடம் படித்து விளக்கமளித்து, அவர் சரியானவை என்று ஒப்புக் கொண்டு என் முன்பாக கையொப்பம் செய்தார்.

சார்பு நீதிபதி,
சத்தியமங்கலம்.